

REVELATION

ஆங்கிலப் பெயர் என்றாலும் தமிழ்ப் படம் தான். இண்டிபெண்டண்ட் திரைப்படம். இம்மாதிரியான திரைப்படங்களுக்கு டிஜிட்டல் மீடியம் ஓர் வரப்பிரசாதம். திரையரங்குகளில் இம்மாதிரியான படங்களுக்கு நிச்சயம் கமர்ஷியல் வரவேற்பு கிடைக்காத நிலையில் அங்கே ரிலீஸ் செய்வதை விட, இம்மாதிரியான ப்ளாட்ஃபார்மில் வெளியிட்டு வெற்றி பெறுவது சந்தோஷமான விஷயம். பூஷன் ஃபிலிம் ஃபெஸ்டிவலில் திரையிட தெரிவு செய்யப்பட்ட படம்.

நடுத்தர வயது மனோகர் தன் பாரலைஸ்ட் தாயுடன் கொல்கத்தாவுக்கு குடிவரும் தமிழன். அதே வீட்டில் சேகர்-ஷோபா தம்பதியினர் வசிக்கிறார்கள். தமிழர்கள். சேகர் ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் நிருபராய் வேலை செய்கிறான். மனோகரின் தாயைப் பார்த்துக் கொள்ள ஷோபாவிடம் உதவி கேட்க, அவள் தானே பார்த்துக் கொள்வதாய் சொல்கிறாள். மனோகர், ஷோபாவிற்குமான நெருக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் வளர ஆரம்பிக்க, சேகரின் பத்திரிகை ஆசிரியர் திவ்யா எனும்

புதிய இண்டர்னுடன் சேர்ந்து கொல்கத்தாவில் உள்ள பேண்ட்களைப் பற்றி ஆர்டிக்கள் எழுதச் சொல்ல, அவர்கள் இருவரும் சேர்ந்து பயணிக்கிறார்கள்.

அவர்களின் நெருக்கமும் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்கிறது. அவளுக்கு 60 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்து உதவும் அளவிற்கு. இரண்டு ஜோடிகளின் நெருக்கமும்

நிச்சயம் கமர்ஷியல் பட விரும்பிகளுக்கான பரிந்துரையில்லை. நல்ல படங்களை விரும்புகிறவர்களுக்கான பரிந்துரை!

உடல் ரீதியாய் நெருக்கமாக முனைய, அங்கே சேகரும், இங்கே மனோகரும் தவிர்க்கிறார்கள். தவிர்ப்பதற்கான காரணம்? சேகர், ஷோபா தம்பதிகளிடையே இருக்கும் வெறுமைக்கான காரணம்?. மனோகர் ஷோபாவை இக்னோர் செய்வதற்கான காரணம் போன்ற எல்லாவற்றிக்கும் விடை க்ளைமேக்ஸில் வெளிப்படுகிறது.

சேத்தனை பல படங்களில் சீரியல்களில் நாம் பார்த்திருப்போம். நிஜமாகவே அவரின் திறமைக்கு சரியான தீனி போட்டிருக்கும் படம். லக்ஷ்மிப் பிரியாவின் மிக இயல்பான நடிப்பு இதில் பெரிய ப்ளஸ்.

ஆரம்பக் காட்சிகளிலிருந்து இறுதி வரை இறுக்கமான, மெதுவான லென்தி விஷுவல்கள், கமர்ஷியல் பட ஸ்டைல் எடிட்டிங் இல்லாமல், நிறுத்தி நிதானமாய் போவது. மிகக் குறைந்த வசனங்களில் காட்சிகளின் கனத்தை, அது கொடுக்க வேண்டிய உணர்வை சின்னச் சின்ன ரியாக்ஷன்களில் சேத்தன், லக்ஷ்மி ஆகியோரின் நடிப்பில் வெளிப்படுத்தியிருப்பது, மிக மெல்லிய ரீ ரிக்கார்டிங். மிக இயல்பான கொல்கத்தாவை விஷுவலாக்கியிருப்பது. படம் நெடுக மெதுவான போக்கை வேண்டுமென்றே வைத்திருப்பதும், யாருக்கு என்ன பிரச்சனை என்பது வெளிப்படும்போது அந்த மெதுத்தன்மை நியாயமாகப்படுகிற சாமர்த்தியம்.

துரோகம், குற்றவுணர்ச்சி, இந்திய திருமண உறவு போன்றவற்றை மிக திறமையாய் கையாண்டிருப்பது என இயக்குனர் விஜய் ஜெயபால் அழுத்தமாய் முத்திரை பதித்துள்ளார். நிச்சயம் கமர்ஷியல் பட விரும்பிகளுக்கான பரிந்துரையில்லை. நல்ல படங்களை விரும்புகிறவர்களுக்கான பரிந்துரை.